


மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம், சுத்தமான மற்றும் பாதுகாப்பான குடிநீர் குறித்து, ஊராட்சித்தலைவர்களுக்கான பயிற்சி முகாம் நாகர்கோவில், டவர் ஜங்ஷன், ஹோட்டல் பயோனியர் கிராண்ட் பேலஸ், சின்ட்ஹரார் அரங்கில் இன்று (01.08.2016) நடைபெற்றது.

செ.வெ.எண்: 487/2016 நாள்: 01.08.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், சுத்தமான மற்றும் பாதுகாப்பான குடிநீர் குறித்து, ஊராட்சித்தலைவர்களுக்கான பயிற்சி முகாமினை இன்று (01.08.2016) துவக்கி வைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பொதுமக்களுக்கு சுத்தமான குடிநீர் தடையின்றி கிடைத்திட, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள்.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பாக, ஊராட்சி தலைவர்களுக்கு, கிராம அளவிலான குடிநீர் வழங்கல், சுகாதார மேலாண்மை மற்றும் சுத்தத்தை பேணி காக்குதல் தொடர்பாக ஒருநாள் பயிற்சி முகாம் நாகர்கோவில், டவர் ஜங்ஷன், ஹோட்டல் பயோனியர் கிராண்ட் பேலஸ், சின்ட்ஹார் அரங்கில் இன்று (01.08.2016) நடைபெற்றது.

பயிற்சி முகாமிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று, பேசும்போது தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பொதுமக்களின் பாதுகாப்பு கருதி, சுத்தமான குடிநீர் வழங்கிட, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு உத்தரவிட்டுள்ளார்கள். மேலும் கிராம அளவிலான ஊராட்சி தலைவர்கள், சுத்தமான குடிநீரினை தேவைக்கேற்ப பயன்படுத்துவது குறித்து, பொதுமக்களிடையே விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ள தெரிவித்திருந்தார்கள்.

அதனடிப்படையில் கிராம அளவிலான குடிநீர் வழங்கல், சுகாதார மேலாண்மை மற்றும் சுத்தத்தை பேணி காக்குதல் தொடர்பான ஒருநாள் பயிற்சி முகாம் இன்று (01.08.2016) நடைபெற்றது. இந்த முகாமில், குறிப்பாக நீர்தேக்கத் தொட்டி சுத்தபடுத்துவதை குறித்தும், தண்ணீரில் குளோரின் கலக்கும் முறை குறித்தும், குப்பைகளை உடனுக்குடன் அகற்றுவது குறித்தும் பயிற்சி தலைமை அலுவலக தகவல் தொடர்பு மற்றும் திறன் மேம்பாட்டு பிரிவு அலுவலர்களால் பயிற்சி வழங்கப்பட்டது. இப்பயிற்சியில் அளிக்கப்படும் அறிவுரைகளை பின்பற்றுவதோடு, பொதுமக்களிடையே எடுத்துக்கூற வேண்டும். குறிப்பாக அரசால் வழங்கப்படும் வழிகாட்டு நெறிமுறைகளை தவறாமல் பின்பற்றி வந்தால், டெங்கு போன்ற வைரஸ் காய்ச்சல் ஏற்படாது. மேலும் வயிற்றுபோக்கு (டையரியா) போன்ற நோய்கள் ஏற்படாமல் இருக்க வேண்டுமென்றால், ஊராட்சித்தலைவர்கள், தங்களது ஊராட்சியில் உள்ள

பொதுமக்களிடையே திறந்தவெளியில் மலம் கழித்தால் ஏற்படும் தீமைகள் குறித்தும், சுகாதார கேடு குறித்தும் அவ்வப்போது எடுத்து கூறுவதோடு, பாதுகப்பான குடிநீர் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தலைமை அலுவலக தகவல் தொடர்பு மற்றும் திறன் மேம்பாட்டுப்பிரிவு நிர்வாகப் பொறியாளர் திரு. பாஸ்கர் சுந்தரராஜ் மற்றும் உதவி நிர்வாக பொறியாளர் திரு. பழனிக்குமார் ஆகியோர்கள் பாதுகாப்பான குடிநீர் குறித்து, மாவட்டத்திலுள்ள ஒன்பது ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 30 ஊராட்சி மன்ற தலைவர்களுக்கு பயிற்சி அளித்தார்கள்.

கூட்டத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாக பொறியாளர் பொறி. ஓய். அருள்தாஸ் (கிராம குடிநீர் திட்ட கோட்டம்), உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமதி. ராணி, நிர்வாக பொறியாளர் திரு. ஆர். பிரசாத் (சாக்கடை திட்டம்), உதவி நிர்வாகப்பொறியாளர் (ஓய்வு) திரு. சுந்தரராஜ் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.